

திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு ஏற்பாட்டில் தென்னூர் உழவர் சந்தையில் இப்தார் நோன்பு தி றப்புநிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன, பேராசிரியர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. உள்ளிட்ட ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நிதியிலிருந்து – மருத்துவ சிகிச்சை பெற

# வில்வித்தை பயிற்சியாளர் டாக்டர் ஷிஹான் ஹுசைனிக்கு ரூ.5 லட்சத்திற்கான காசோலை!

## துணை முதல்வர் அறிவுறுத்தல்படி வழங்கல்!

சென்னை, மார்ச் 18-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி வில்வித்தை பயிற்சியாளர் டாக்டர் ஷிஹான் ஹுசைனிக்கு மருத்துவ சிகிச்சை பெற தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நிதியிலிருந்து ரூ. 5 லட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் நவீன வில்வித்தை வீரர்களை உருவாக்கி டாக்டர் ஷிஹான் ஹுசைனி இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் வில்வித்தைக்கு பெறும் பங்களிப்பு செய்து வருகிறார். இவர் 400க்கு மேற்பட்ட வில்வித்தை வீரர்களுக்கு பயிற்சி அளித்தும், தமிழ்நாட்டில் நவீன வில்வித்தைக்கு முன்னோடியாக இருந்து ரீகர்வ் வில் (1979) மற்றும் காம்பவுண்ட் வில் (1980) ஆகியவற்றை அறிமுகப்படுத்தினார்.

நவீன வில்வித்தை பயிற்சி பாடத்திட்டத்தை வடிவமைத்து, மேம்பாட்டிற்கான தரங்களை வடிவமைத்தார். இந்தியாவின் முன்னணி வில்வித்தை வீரர்களுக்கு பயிற்சி அளித்துள்ளார். தற்போது ஹுசைனியின் நேரடி பயிற்சியின் கீழ் மொத்தம் 100 வில்வித்தை வீரர்கள் மற்றும் 300 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.



ஹுசைனியின் உடல் நிலையை கருத்தில் கொண்டு மருத்துவ சிகிச்சை பெறவதற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது.

# புதுக்கோட்டையில் 14 புதிய பேருந்து வழித்தட சேவை!

## அமைச்சர் எஸ்.ரகுபதி கொடியசைத்து துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை,மார்ச்.18-

புதுக்கோட்டை மாநகராட்சி, புதிய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில், 14 புதிய பேருந்து வழித்தட சேவையினை, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 13.03.2025 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் நலன் மீகு அதிக அக்கறைகொண்டு எண்ணற்றத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழகத்தின் முன்னோடித் திட்டமான, நகரப் பேருந்துகளில் மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகளுக்கு இலவச பேருந்து பயணத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, புதுக்கோட்டையில் இருந்து திருக்கோகர்ணம், முத்துடையான்பட்டி, நார்த்தாமலை, குளத்தூர் வழியாக கீரனூருக்கும், புதுக்கோட்டையில் இருந்து நமணசமுத்திரம், லேணாவிளக்கு, திருமயம், கடியாபட்டி வழியாக ராயவரத்திற்கும், புதுக்கோட்டையில் இருந்து மருத்துவக்கல்லூரி, வடவாளம், மூக்கம்பட்டி, மழையூர் வழியாக துவாருக்கும், புதுக்கோட்டையில் இருந்து திருச்சி, முசிறி, தொட்டியம், நாமக்கல் வழியாக சேலத்திற்கும், அறந்தாங்கியில் இருந்து ரெத்தினக்கோட்டை, வல்லவாரி, சித்தாதிகாடு வழியாக பேராவூரணிக்கும், அறந்தாங்கியில் இருந்து மேலப்பட்டு, நாகுடி, சிங்கவனம், மேலப்பட்டு, நாகுடி, வேதியன்காடு வழியாக காரக்கோட்டைக்கும், அறந்தாங்கியில் இருந்து காரைக்குடி, திருப்பத்தூர், மேலூர் வழியாக மதுரைக்கும் புதிய பேருந்து வழித்தட சேவைகள் துவக்கி வைக்கப்பட்டது.

மேலும், கந்தர்வகோட்டையில் இருந்து கோமாபுரம், தச்சங்குறிச்சி, டி.பி.சானிடோரியம் வழியாக செங்கிப்பட்டிக்கும், கந்தர்வக்கோட்டையில் இருந்து சுந்தம்பட்டி, வேலாடிப்பட்டி, அம்புகோவில் வழியாக கறம்பக்குடிக்கும், திருச்சியில் இருந்து டி.வி.எஸ் டோல்கேட், ஏர்போர்ட், மாத்தூர் ரவுண்டானா, பாரதிதாசன் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், காளமாவூர் வழியாக கீரனூருக்கும், இலுப்பூரில் இருந்து மேட்டுச்சாலை, காலாடிபட்டி சத்திரம், அன்னவாசல், திருவப்பூர் வழியாக புதுக்கோட்டைக்கும், பொன்னமராவதியில் இருந்து ஆலவயல், நகரப்பட்டி, பாலகுறிச்சி, ஒலியமங்கலம் வழியாக சடையம்பட்டிக்கும், புதுக்கோட்டையில் இருந்து திருவரங்குளம், வம்பன் 4 ரோடு, ஆலங்குடி, பள்ளத்திவிடுதி வழியாக கொத்தமங்கலத்திற்கும், இலுப்பூரில் இருந்து இருந்திராபட்டி, பாக்குடி, ஒடுக்கூர், லெக்கனாபட்டி, குளத்தூர் வழியாக கீரனூருக்கும் என ஆகமொத்தம் 14 புதிய பேருந்து வழித்தட சேவைகள் துவக்கி வைக்கப்பட்டது.

இதன் மூலம் புதுக்கோட்டையிலிருந்து மற்ற பகுதிகளுக்கு செல்லும் பொதுமக்கள் பயனடைவார்கள்.

எனவே, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இந்த புதிய பேருந்து சேவைகளை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), பொது மேலாளர் (த.அ.போ.க.) கே.முகமதுநாசர், புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையர் த.நாராயணன், உதவி இயக்குநர் (த.அ.போ.க.) அ.செந்தில், துணை மேலாளர்கள் தா.சுரேஷ் பார்த்திபன் டிக்ரோஸ் (வணிகம்), ராஜேந்திரன் (தொழில் நுட்பம்), புதுக்கோட்டை வட்டாட்சியர் மு. செந்தில்நாயகி, அரு.வீரமணி, தொமுச பொதுச் செயலாளர் எம்.வேலுசாமி, எம்.எம்.பாலு, மாமன்ற உறுப்பினர் கனகம்மன்பாபு, ஞானசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் 72 ஆவது பிறந்தநாளையொட்டி தருமபுரி மேற்கு மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் திருமதி. கவிதா மோகன்தாஸ் தலைமையில் 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வழங்கினார். உடன் மாவட்ட துணை செயலாளர் பொறியாளர்.சி.கிருஷ்ணகுமார்,ஒன்றிய செயலாளர் செங்கண்ணன்,நகர செயலாளர் மோகன்,பேரூராட்சி தலைவர் வடமலை முருகன்,மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் ஜெயந்தி,கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் அருண் உதயசூரியன், மாவட்ட மகளிர் சமூக வலைதள பொறுப்பாளர் தமிழ் பாவை,சமூக வலைதள பொறுப்பாளர் சண்முகம்,மற்றும் கழகத்தினர் உள்ளனர்.



சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் தென்னங்குடிபாளையம் அப்பம்மசமுத்திரம் கிராமத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் 2022–23 கீழ் வேளாண்மை – உழவர் நலத்துறைக்கு ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய கட்டிடம், தமிழ்நாடு வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு மாநில விற்பனை வாரியத்தால் ரூ.275 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கட்டிடத்தை அமைச்சர் இரா.ராஜேந்திரன் திறந்து வைத்தார் . இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் தென்னங்குடிபாளையத்தில்

# ரூ.275 லட்சத்தில் வேளாண் விற்பனைக் கூட புதிய கட்டிடம்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் திறந்து வைத்தார்! எஸ்.ஆர்.சிவலிங்கம் பங்கேற்பு!

சேலம், மார்ச். 18-

சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் தென்னங்குடிபாளையம் அப்பம்மசமுத்திரம் கிராமத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் 2022-23 கீழ் வேளாண்மை உழவர் நலத்துறைக்கு ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய - கட்டிடம், தமிழ்நாடு வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு மாநில விற்பனை வாரியத்தால் ரூ.275 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கட்டிடத்தை அமைச்சர் இரா. ராஜேந்திரன் திறந்து வைத்தார் .

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார் , மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், ஒன்றிய செயலாளர் டாக்டர் வே.செழியன், ஒன்றிய துணை செயலாளர் சசிகுமார், பொதுக்குழு உறுப்பினர் சந்திரமோகன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் நல்லம்மாள், ஒன்றிய நிர்வாகிகள் சண்முகம், வரதராஜன், சேட்டு, கருணாநிதி, அரசு, செல்வராஜ், ராஜவேல், சேகர், சந்திரசேகரன், இளங்கோ, சிவராமன், சிவாஜி, ரஜினி, நடராஜ், அன்பழகன், குணசேகரன், ஜோதிவேல், மற்றும் வேளாண்மை கல்லூரி மாணவிகள், திமுக நிர்வாகிகள், துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூரில் தமிழ்நாடு அரசு

# போக்குவரத்துக் கழக பொறியாளர்கள் சங்க கூட்டமைப்பு மாநாடு!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது!

பெரம்பலூர், மார்ச்,18

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக பொறியாளர்கள் சங்க கூட்டமைப்பு மாநாடு பெரம்பலூர் ஆத்தூர் சாலையில் உள்ள அன்பு மகாலில் நடைபெற்றது. பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், கும்பகோணம் போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர் ஆர். .பொன்முடி, விழுப்புரம் போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர் குணசேகரன்,

போக்குவரத்துத்துறை அமைச்சர் சிறப்பு நேர்முக உதவியாளர் ஞானசம்பந்தம், அரசு விரைவு போக்குவரத்துக் கழக பொது மேலாளர் திருச்சி மண்டலம், போக்குவரத்து கழக பொது மேலாளர், போக்குவரத்து கழக அலுவலர் சங்க பொதுச் செயலாளர் செல்வகுமார், தலைவர் ரவி, பொருளாளர் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாநாட்டில்பொறியாளர் ராஜ்மோகன் (கும்பகோணம் கோட்டம்), வரவேற்புரையாற்றினார். பொறியாளர் சங்க செயலாளர் பாலாஜி (மாநகர போக்குவரத்து கழகம்), சங்க தலைவர் குமரேசன் (சேலம் கோட்டம்) சங்க செயலாளர் கார்த்திகேயன் கோவை கோட்டம் ஆகியோர் பொறியாளர்களின் கோரிக்கையாக பொறியாளர்களுக்கு உரிய காலத்திற்கு பதவி உயர்வு தருதல், காலி பணியிடங்களை நிரப்புதல் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து பின்பு நிறுத்தி வைக்கப்பட்ட பொறியாளர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகையினை மீண்டும் வழங்குதல் போன்றவற்றை பொறியாளர்களின் கோரிக்கை மனுவாக அமைச்சரிடம் வழங்கினார்கள்.

மாநாட்டில் கலந்து கொண்ட பொறியாளர்கள் போக்குவரத்து கழகத்தில் மிக மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் சுமார் 400 பேர் கலந்து கொண்டார்கள்.

மாநாட்டில் தலைமை உரை ஆற்றிய போக்குவரத்து துறை அமைச்சர், போக்குவரத்துக் கழகத்தில் மக்களுக்காக அயராது உழைத்து நற்பணி ஆற்றும் பொறியாளர்களுக்கு அரசு விரைவில்கோரிக்கைகளை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும் என்று மகிழ்வுடன் தெரிவித்துக் கொண்டார்.

பொறியாளர் பாஸ்கர் நன்றியுரையாற்றினார்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் அப்பலோ மருத்துவமனை மற்றும் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்திய மாபெரும் இலவச மருத்துவ முகாமை, கரூர் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், கரூர் மாவட்ட கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார் . இதயம், கண், நரம்பியல், நுரையீரல், பொது மருத்துவம், எலும்பு மற்றும் மூட்டு மாற்று சிகிச்சை, பெண்கள் மற்றும் மகப்பேறு மருத்துவம், குழந்தைகள் நலம், காது மூக்கு தொண்டை சர்க்கரை மற்றும் சிறுநீரக பிரச்சினைகளுக்கு பரிசோதனையும், மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன.

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு மணியகாரன் பாளையம் பகுதியில் நடைபெற்ற, இலவச மருத்துவ முகாமை மாநகர் மாவட்டச் செயலாளர் நா. கார்த்திக் தொடங்கி வைத்தார். இதில் அஞ்சுகம் பழனியப்பன் தலைமையில், க.மணிகண்டன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், துரை.செந்தமிழ்ச்செல்வன் இரா.தனபால், தாமோதரன், குமார் மற்றும் கழக நிர்வாகிகள் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

